**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING ENVIRONMENTAL CLEARANCE FOR THE LIMESTONE MINE OF M/s. MARUVATHUR LIMESTONE MINE, S.F. No: 49/1A, 49/1B, 49/8A(P), 69/1B2, 69/1B3, 69/3C, 70/3A(P), 70/3B & 70/4B, PERALI (SOUTH) VILLAGE, KUNNAM TALUK, PERAMBALUR DISTRICT OVER AN EXTENT OF 3.545 HECTARES AT M/s. SRI AMMAN MAHAL, ARIYALUR MAIN ROAD, KAVULPALAYAM VILLAGE, PERAMBALUR TALUK, PERAMBALUR DISTRICT ON 11.06.2025.**

**PRESIDING OFFICERS:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. S. Vaithyanathan | : | Personal Assistant to the District Collector (General),<br>Perambalur District. |
| 2. | Mrs. S. Vijaya Priya | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Perambalur District. |
| **PROPRIETOR:** | | | |
| 3. | Thiru S.Saravanan,<br>Mining Lessee &<br>Director- Dhandapani Cements Private Limited. | | **Project**<br>M/s. Maruvathur limestone Mine,<br>S.F. No: 49/1A, 49/1B, 49/8A(P), 69/1B2, 69/1B3, 69/3C, 70/3A(P), 70/3B & 70/4B,<br>Perali (South) Village,<br>Kunnam Taluk,<br>Perambalur District. |

The total number of people who attended the meeting, including the Proprietor of the quarry, Government Officials, Environmental Activists and the General Public, was 279. (copy of the attendance register is attached herewith).

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur, said** “Good morning to everyone, Welcome the Personal Assistant to the Collector (General) who presiding over the public hearing meeting for the proposed Limestone Mine of M/s. Maruvathur limestone Mine, S.F.No. 49/1A, 49/1B, 49/8A(P), 69/1B2, 69/1B3, 69/3C, 70/3A(P), 70/3B & 70/4B, Perali (South) Village, Kunnam Taluk, Perambalur District over an extent of 3.545 hectares and welcomed the other government officials, the public, volunteers,

police department and friends from the press and media on behalf of the Tamil Nadu Pollution Control Board and the Perambalur District Administration.

She informed that the public hearing is being held to obtain Environmental Clearance from the State Environmental Impact Assessment Authority for the project Maruvathur Limestone Mine. She also informed that press release regarding this Public Hearing has been published 30 days in advance in Tamil Newspaper 'Dinathanthi' and English Newspaper 'The New Indian Express' on 08.05.2025.

Further, this public hearing meeting has already been advertised through pamphlets and loudspeakers to inform the public living in Maruvathur and Perali villages on 09.06.2025.

The project Environmental Consultant will elaborate the proposed project in detail and after that the public can give their comments one by one by giving their name and address and the comments of the public will be recorded in audio and video format and send to the State Environmental Impact Assessment Authority.

**{Personal Assistant to Collector (General)**: He said that the environmental consultant will provide a full explanation of this project and after that the public can give their opinion about this project.**}**

**Environmental consultant:**

After expressing his greetings to everyone, he explained in detail about this limestone project (Photocopy of the project summary is attached).

**{Personal Assistant to Collector (General)**: He said that the public can give the opinion about this project. He also informed that all the public opinions will be recorded fully and forwarded to Tamil Nadu Pollution Control Board, Chennai. Also, he requested the public to give their name and village before telling their opinions.**}**

Following this, the Public who attended the public hearing expressed their views as follows :

**1. Thiru Periyasamy, Ariyalur**

He informed that he had visited the Mine area frequently and the mine was in operation for 20 years, during that period there was no adverse impact on the people of the area. He informed that this project will operate for another 20 years and he believed that there will be no harm during that period as well, so permission can be given to start this project.

**2. Thiru Venkatachalam, Maruvathur:**

He told that he is a farmer and informed that already a crusher is located near his agriculture field and they did not oppose it. He said that their 20 coconut trees are getting affected now due to the electricity line passing over it and 10 days before, their coconut trees had burnt. He said that no action was taken over his petition by the Electricity Board in this regard so far. He asked to proceed the project without causing any disturbance to public.

**3. Thiru Ganesan, Panangur, Ariyalur:**

He expressed his gratitude to the District Collector and the District Environmental Engineer. He said that on hearing about the mining, it was learnt that the mining was carried out in a manner that would ensure complete safety for the people and villages living there. He said that the water resources would not be affected and that they would extract the stone using a breaker without using explosives. In that way, the mining work would be carried out properly, and he said that what resources are lacking in this country, why should we beg from foreign lands, we can use our mineral resources and provide occupational safety to more than a thousand families, so environmental clearance be granted.

**4. Thiru Palanisamy, Keelapalur, Ariyalur:**

He expressed his gratitude to everyone. He informed that the mine was already operated by the company for more than 20 years in this area and there was no adverse impacts so far. He also stated that the same company is going to operate the mine and there will not be any adverse impact for the people. He opined that the mine will be operated with rock breakers, without any drilling and blasting activities, there will be no adverse impact anticipated. He also said that there will be no adverse impact on water table and no environmental impact due to pollution. He requested everyone to welcome this project happily.

**5. Thiru Radhakrishnan, Vayalapadi:**

He expressed his gratitude to everyone. He said that this mine has been in operation for more than 20 years and stopped due to various reasons. He stated that this meeting is being held for obtaining permission to resume the operations and there is no objection to commence the mine operations.

**6. Ms. Keerthana, Maruvathur:**

She asked what way they are getting benefitted by this mine. She said that there were educated youth and women, and she asked if there was any possibility of having employment from this mine. She enquired if there is any adverse impact to the village due to this mine.

**7. Thiru S. Vijayakumar, Maruvathur:**

He informed that they have no objection for operating this Maruvathur mine. He also insisted that no mining activities would carried out during night times. He requested to cooperate with the people by driving the trucks slowly. He also requested to implement mitigation measures to control dust.

**8. Thiru Ramasamy, Panangur:**

He expressed his gratitude to everyone. He requested to give employment opportunity to the villagers. He also requested to operate the mine without any disturbance. He asked to cover the mineral transport tippers with tarpaulin to avoid generation of dust. He insisted to give employment opportunity for the women in the village. He requested to help people in Maruvathur, Panangur, Perali Villages. He asked to keep the mine area clean, to operate the mine without affecting the people and to help the village people.

**{Personal Assistant to Collector (General)**: He asked the public anyone wants to register their opinion about this project. He also asked them to mention their name and place before gives their opinion.}

**9. Thiru Palanibharathy, Ariyalur:**

He expressed his gratitude to everyone. He said that the advanced mining technologies are adopted nowadays and there will not be any problem. He said that explosives are not used at present and the mine is being operated using breakers. He said that work is not done in the mines at all hours of the day and night and that there are many mines around the village. He said that since the mine will be operate only from 8 am to 5 pm, there is no objection from his village to start this mine.

**10. Thiru. Thangarasu, Maruvathur:**

He stated that this mine was in operation at Maruvathur since 1995 and there was no adverse impacts. He informed that livelihood of about 50 families depended on this mine. He informed that about 3-4 mines were operated in the village and they were stopped. He said that people have sold their agricultural lands and that it would be helpful if they were given jobs in this mine. He said that it would be better if people from local were employed for jobs including drivers and labourers. He said that if this mine hired people from outside of villages for Quarry

operation, then there will be no benefit from it and this mine should be started by giving jobs to local people.

**11. Thiru. Sathish, Environmental Protection Secretary:**

He expressed his gratitude to everyone. He stated that he respects the culture and traditions and accepts the valid concerns of local people. He asserted that the government should adopt the village and release sufficient funds for the sustainable development. He also requested the government officials to arrange for employment opportunities, and provide permanent houses for the qualified people. He requested as an Environmental Protection Secretary that the village should be ecologically and environmentally sustainable. He also requested the proponent to grow trees and save them. He also requested the government high officials to give the environmental clearance to the proponent without imposing any condition.

{**Personal Assistant to Collector (General)**: He asked the public if anyone need to express their opinions on this project and asked people to tell their opinions one by one. He said that everyone's comments can be recorded if they speak one by one.}

**(Meeting Continued)**

**12. Thiru. Chinnadurai, East Street, Maruvathur:**

He stated that they did not come to stop the mining operation in Maruvathur and that there would be no problem if it was located 5 kilometers away. He said that they opposed the mine because it would affect houses and cause dust as it is located right next to the village. He requested everyone who has come here to cooperate with them.

**13. Tmt. Tamilselvi, Maruvathur:**

She stated that they have no problem or objection to the operation of this mine. She stated that there were no issues from previous operation of the mine and they will cooperate if the mine is operated without any damage to sheep and cattle, without using explosive, operating the mine vehicles slowly to avoid dust and without causing any disturbance to the people. She said that there are many unemployed people in their village and requested to provide job with high salary. She assured that they will cooperate with the company if the company cooperate with them.

**(There was a small commotion, then the meeting continued).**

{**Personal Assistant to Collector (General)**: He asked the public to remain calm and to keep everyone seated.}

**(Meeting Continued)**

**Thiru Ganesan, Panangur, Ariyalur:** He asked the public to remain calm and to respect the Perambalur Personal Assistant to Collector (General), Environmental Officer, Environmental Consultant and the Police Department. He also said that they had all come to elaborately explain the project. So everyone should remain calm and that the officials would explain all the details. He asked all the public to be seated. He said that he had also come from the village and that this was a wonderful event and that the public could express their opinions and no one should just leave.

**14. Thiru. Krishnasamy, Panagur:**

He said that they have no problem with the mining operation. He said that no potholes found on the roads and that the company should fix the same. He asked them to operate mine without harming the people.

**15. Thiru. R.Saravanan, Maruvathur:**

He asked the public to remain calm. He said that they could express their opinions to the Personal Assistant to Collector (General) and officials. He said that they had requested that there should be no blasting and pollution problem in the village and they would ensure that no blasting and pollution occurs. Also, for no potholes should found on the roads, the unit ensure no overloading on vehicles, if so they can inform them. He said that technology is now more advanced than before. He said that two days ago, they came to the village and advertised about this meeting and invited us. He also said that now two people have come to spoil it. He said that they should not spoil the good thing yet to come. He said that good things will have been happen to our village through them and asked others to express their opinions.

**{Personal Assistant to Collector (General)**: He said that the public can register their comments on this project and the petitions may also be given.**}**

**(Meeting Continued)**

**16. Thiru. Rengasamy, Maruvathur:**

He said that they acquired the site in 1991, started mining in 1995 and temporarily stopped in 2000 due to a minor issues. He said he did not feel any ill effects in the village due to this mine. He said that since school children and school vehicles were coming in large numbers, it would be better if the mine operated after 10 pm when there was no one around. He said that there was no problem occurs to the extent of stop this mine and that it would be better if the pollution control department monitors this mine carefully.

{**Personal Assistant to Collector (General)**: He asked the public if anybody wanted to tell their opinion about this project.}

**17. Thiru. Arumugam, Thiru. Subramani, Thiru. Raju, Maruvathur:**

He said that no administration, quarry, mine, Hot Mix plant or crusher should get permission without the knowledge of village leaders. They informed that when they gave petition to the District Collector Office in 2024 against establishment of Hot Mix plant, the District Environment Officer did not give permission, like this they oppose this mine project on behalf of their village. He said if permission given by getting sign from Villagers deliberately without explain anything to them, he will give petition at the District Collector's Office. Because, project was opposed when permission asked to set up a Hot Mix plant in Maruvathur in 2024, so they said that permission should not be given for this mine project too. He said that already, 50 unit tippers were operating day and night, they would set off blasting at any time, many houses had been damaged, roads had been completely damaged, many goats and dogs had died and also said that man had fallen into this quarry and died. Therefore, the permission should not be given, and also said that if permission is given for this project that they would stage a road blockade.

**Mr. (Name not mentioned):**

He said that no public here comes have knows the information and have signed without any knowledge about the meeting.

{**Personal Assistant to Collector (General)**: He said that all the public opinion is being recorded here and it will be sent to Chennai.}

**(Meeting Continued)**

But he said that the meeting should be ended, otherwise we will submit a petition to the District Collector's office on Monday and also said Maruvathur does not need a mine.

**18. Thiru. Kathiravan, Ex. Panchayat Ward Member, Maruvathur:**

He said they have made a resolution that there should be no crushers in the Maruvathur-Perali-Panagur border also under their panchayat not in one but two Grama Sabhas. Therefore, they do not want this mine to start again. There are 150 families living in the area nearby mine. Currently, there are houses of about 40 families. If a mine operate in that area, no one will be able to live there. Already, people of Eraiyur are creating problems because of having many crushers. He said that they will also face the same situation. He said that they will carry heavy loads in their vehicles so the roads will get damaged. He said that already permission asked to

set up a Hot mix plant near his village, the officials were refused. He said they did not want a Hot mix plant in that area and also this crusher. He said that because this mine, there is a big crater and many people have fallen into it and died. He said that there is still a 50-60 feet deep pit at that place that has not yet been filled. He said that if the pit is dug again, it will be dangerous for the people. He said that there is a house 30 meters away from the mine so permission should not be given. He also said they will protest, if permission given.

**19. Thiru. Venkatesan, Maruvathur:**

He said that a crusher has been in operation in the village for about 20 years, due to which they face pollution problems and trying to close it. He said that many adverse impacts exists around the village due to mine. They are fear of problems may arise from mine pits, as there are mine pits all around the village located in all east, west, north directions. He said that this mine is only 500 meters away from their village. He said that if they use explosives in it, the impact will be even greater. He said that there is already a Hot mix plant on the way from Perali to Maruvathur Village, they have decided to file a petition seeking permanent closure or set up 500 meters away from the road. He said that the distance between the road and the Hot mix plant is only 50 feet and there is a lot of pollution that is not being controlled. He requested that they have to provide a way to do good to the people without giving any pollution certificate to this mine. He said that if possible, do not give permission to the quarry.

**20. Thiru. Gunasekaran, Maruvathur:**

He greeted the District Collector. He said that buses and vehicles were plying on the village road and the soil was not suitable. He said that they had given houses to Adi Dravidians nearby the site and that the quarry was going to be operational again. He said that this government is for the people and he requested to make a fair decision. He said permission should not be given to do anything else and that they would abide by it.

{**Personal Assistant to Collector (General)**: He asked the public if anybody wanted to comment on the project. He asked them to register their opinions if they had on this project.}

Since no public came forward to express their views, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur informed that all the opinions made in the meeting have been recorded in audio and video format and that all of this and all the petitions received in the meeting will be sent to the State Environmental Impact Assessment Authority through the Tamil Nadu Pollution Control Board, and the public hearing meeting has been concluded.

{**Personal Assistant to Collector (General)**: He thanked all those who had given their opinions, on behalf of the district administration.}

**Enclosures**

1. Copy of attendance register of Public hearing (25 pages 279 members)
2. Presentation of Project summary
3. Copy of petitions received during Public hearing-25 Nos.
4. Video recording of public hearing Pendrive

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Perambalur**

**Personal Assistant to Collector**
**(General),**
**Perambalur**

(3/3)

**பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பேரளி (தெற்கு) கிராமம், தி/ள். மருவத்தூர் சுண்ணாம்புக்கல் சுரங்கம்**, புல எண்: 49/1A, 49/1B, 49/8A(P), 69/1B2, 69/1B3, 69/3C, 70/3A(P), 70/3B மற்றும் 70/4B **மொத்த பரப்பளவுகளான 3.545 ஹெக்டேரில் அமையவுள்ள சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், கவுள்பாளையம் கிராமம், அரியலூர் மெயின் ரோடில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ அம்மன் மஹால் திருமண மண்டபத்தில் 11.06.2025 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.**

<u>**தலைமை அதிகாரிகள்**</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ச. வைத்தியநாதன் | : | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), பெரம்பலூர் மாவட்டம். |
| 2. | திருமதி. சு. விஜயபிரியா | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர். |
| **நிறுவனத்தினர்** | | | |
| 3. | உரிமையாளர்<br>திரு.S.சரவணன்<br>சுரங்கக் குத்தகைதாரர்<br>இயக்குனர்,<br>தண்டபாணி சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் | : | **<u>திட்டம்</u>**<br>தி/ள். மருவத்தூர் சுண்ணாம்புக்கல் சுரங்கம், புல எண்: 49/1A, 49/1B, 49/8A(P), 69/1B2, 69/1B3, 69/3C, 70/3A(P), 70/3B, 70/4B,<br>பேரளி தெற்கு கிராமம்,<br>குன்னம் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், அரசு அலுவலர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களின் மொத்த எண்ணிக்கை – 279 ஆகும். (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர்** அவர்கள், "அனைவருக்கும் இனிய காலை வணக்கம், பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பேரளி

தெற்கு கிராமத்தில் தி/ள். மருவத்தூர் சுண்ணாம்புக்கல் சுரங்கம், புல.எண். 49/1A, 49/1B, 49/8A(பகுதி), 69/1B2, 69/1B3, 69/3C, 70/3A(பகுதி), 70/3B மற்றும் 70/4B-ல் 3.545 ஹெக்டேரில் அமையவுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்திற்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தித்தர வருகைபுரிந்துள்ள பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் அவர்களையும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகளையும், பொதுமக்களையும், தன்னார்வளர்களையும், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை மற்றும் ஊடகத்துறை நண்பர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும், பெரம்பலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும் வருக வருக என்று வரவேற்றார்.

சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைப்பதற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெரும்பொருட்டு இந்தக் கூட்டம் நடைபெறுகிறது என்றார். இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் இக்கூட்டம் குறித்து 08.05.2025 தேதியிட்ட 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் மற்றும் 'தினத்தந்தி' தமிழ் நாளிதழ் ஆகியவற்றில் 30 நாட்களுக்கு முன்பாகவே பத்திரிக்கை செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்று கூறினார்.

மேலும், பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் குறித்து மருவத்தூர் மற்றும் பேரளி கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் துண்டு பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கிகள் மூலம் 09.06.2025 அன்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

மேலும், முன்மொழியப்பட்ட இத்திட்டம் குறித்து சுற்றுச்சூழல் திட்ட ஆலோசகர் அவர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள் என்றும் பின்னர் பொதுமக்கள் ஒவ்வொருவராக தங்களுடைய பெயர் மற்றும் முகவரியை தெரிவித்துவிட்டு, தங்களுடைய கருத்துக்களை பதிவுசெய்யலாம் என்றும் கூறினார். பதிவுசெய்யப்படும் பொதுமக்கள் கருத்துக்கள் அனைத்தும் ஒளி மற்றும் ஒலி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் இத்திட்டம் தொடர்பான விளக்கத்தைக் கூறுவார் என்றும் அதை முழுமையாகக் கேட்டுவிட்டு அதன்பிறகு பொதுமக்கள் தங்களது கருத்துக்களைப் பதிவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

**சுற்றுச்சூழல் ஆலோசகரின் உரை**

அனைவருக்கும் தன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, இத்திட்டம் தொடர்பாகவும் சுற்றுச்சூழல் திட்ட அறிக்கையை பற்றி விரிவாக விளக்கிக் கூறினார். (திட்டச்சுருக்கத்தின் ஒளி நகல் இணைக்கப்பட்டுள்ளது).

**பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்** அவர்கள், பொதுமக்களிடம் திட்டம் தொடர்பான தங்களது கருத்துக்களைக் பதிவு செய்யலாம் என்றும், பொதுமக்கள் கூறும் கருத்துக்கள் அனைத்தும் முழுமையாக ஒளிப்பதிவு செய்யப்படும் என்றும், பின்பு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னைக்கு அனுப்பப்படும் என்றும் கூறினார். மேலும், பொதுமக்கள் தங்களது கருத்துக்களைக் கூறுவதற்கு முன், தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் தெரிவித்து, பின் கருத்துகளை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

**1. திரு.பெரியசாமி, அரியலூர்:**

தான் இந்த சுரங்கப்பகுதிக்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பதாகவும், இந்த சுரங்கம் 20 வருடங்களாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்றும், இந்த செயல்பாட்டின்போது இந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் கிடையாது என்றும் கூறினார். இன்னும் 20 வருடங்களுக்கு எடுக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றும் அந்த காலங்களிலும் எந்த பாதிப்பும் இருக்காது என்று

நம்புகிறோம் என்று கூறி, அதனால் இந்த திட்டம் ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுக்கலாம் என்று கூறினார்.

**2. திரு.வெங்கடாசலம், மருவத்தூர்:**

தான் ஒரு விவசாய குடிமகன் என்றும், தனது வயலுக்கு அருகில் ஏற்கனவே ஒரு கிரஷர் அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். தாங்கள் அதற்கு எதுவும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும், தாங்கள் வைத்திருக்கும் 20 தென்னைமரங்களுக்கு மேல் மின்சார கம்பிகள் கொண்டுவருவதால் தங்களுக்கு ஏகப்பட்ட பாதிப்பு ஏற்படுவதாகக் கூறினார். பத்து நாட்களுக்கு முன் தென்னைமரங்கள் எரிந்து போனதாகவும், மின்சார வாரியத்தில் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கூறினார். அதனால் தங்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் இத்திட்டத்தை செய்துகொள்ளுமாறு கூறினார்.

**3. திரு.கணேசன், பனங்கூர், அரியலூர்:**

மாவட்ட ஆட்சியருக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கு தன்னுடைய வணக்கத்தை தெரிவித்துகொண்டார். சுரங்கத்தைப்பற்றி முழுமையாக விசாரித்தவகையில், அங்கிருக்கக்கூடிய மக்களுக்கும் கிராமங்களுக்கும் முழுமையான பாதுகாப்பு செய்யக்கூடிய வகையில் இருக்கிறது என்றார். நீர்வளம் பாதிக்கப்படாத அளவிலும், வெடிமருந்துகளை பயன்படுத்தாமல் பிரேக்கரைப் பயன்படுத்தி கல் எடுப்பதாகத் தெரிவித்தார்கள். அதுதான் சிறந்தது என்று கூறினார். அந்தவகையில் இந்த சுரங்கப்பணி செம்மையாக செயல்பட்டு, என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில், நமது கனிம வளத்தைப் பயன்படுத்தி, கிட்டத்தட்ட ஒரு ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தொழில்ரீதியான பாதுகாப்பை தரக்கூடிய வகையில் இருப்பதனால் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**4. திரு.பழனிச்சாமி, கீழப்பழூர், அரியலூர்:**

அனைவருக்கும் காலை வணக்கத்தினை தெரிவித்தார். இந்த நிறுவனம், ஏற்கனவே இந்தப்பகுதியில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள் என்றும், சுண்ணாம்புக்கல் சுரங்கத் திட்டத்தினால் எந்தவிதமான பாதிப்புமில்லாமல் இருந்துள்ளது என்றும் கூறினார். தற்போது இதே நிறுவனம் இதை ஆரம்பிப்பதாகச் சொல்வதால் நமக்கு எந்தவிதமான பாதிப்புமில்லை என்று கூறினார். மேற்கொண்டு, எந்தவிதமான துளையிடுதல் மற்றும் வெடித்தல் செயல்பாடுகளின்றி நேரடியாக ராக் பிரேக்கர்களின் மூலம் எடுப்பதனால், பாதிப்பு இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றார். நீர்மட்டத்திலோ, சுற்றுப்புற மாசு மூலம் சுற்றுச்சூழல் பாதிப்போ ஏற்பட வாய்ப்பில்லை என்றும் கூறினார். அதனால், இந்த திட்டம் வருவதை எல்லோரும் மகிழ்ச்சியாக வரவேற்கவேண்டும் என்றுக் கேட்டுக்கொண்டார்.

**5. திரு.ராதாகிருஷ்ணன், வயலப்பாடி:**

அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தார். இந்த சுரங்கம் 20 ஆண்டு காலமாக நடைபெற்றுவரும் சுரங்கம் என்றும், சில காரணங்களுக்காக இடையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். திரும்பவும் ஆரம்பிப்பதற்காக அனுமதி கோருவதற்காக இந்த கூட்டம் நடைபெறுவதால், இந்த சுரங்கம் ஆரம்பிப்பதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று கூறினார்.

**6. கீர்த்தனா, மருவத்தூர்:**

இந்த சுரங்கத்தினால் தங்களுக்கு என்ன பயன் என்று கேட்டார். படித்த இளைஞர்கள், பெண்கள் உள்ளனர் என்றும், இதிலிருந்து வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளதா என்றும் கேட்டார். இதனால் ஊருக்கு எவ்வித பாதிப்பும் இருக்காதா என்றும் கேட்டார்.

**7. திரு.S.விஜயகுமார், மருவத்தூர்:**

இந்த மருவத்தூர் சுரங்கம் இயங்குவதில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று கூறினார். இருந்தாலும் இரவு நேரங்களில் இயங்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார். வாகனங்கள் மெதுவாக இயக்கி, தங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் தூசு ஏற்படாமிலிருக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கூறினார்.

**8. திரு.ராமசாமி, பனங்கூர்:**

அனைவருக்கும் தன்னுடைய வணக்கத்தைக் கூறினார். ஊர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டார். இந்த நிறுவனத்தால் எந்த பாதிப்பும் இல்லாமல் செயல்பட வேண்டும் என்று கூறினார். வாகனங்கள் இயக்கத்தின்பொழுது தூசு ஏற்படாமல் இருக்க தார்ப்பாய்கள் கட்டிக்கொண்டு செல்லுமாறும் ஊரிலுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். மருவத்தூர், பனங்கூர், பேரளி பகுதி மக்களுக்கு உதவி செய்யும்படியும் கேட்டுக்கொண்டார். சுத்தமாக வைத்துக்கொள்ளும்படியும் ஊருக்கும் மக்களுக்கும் எந்த பாதிப்பில்லாமல் உதவும் வகையில் நல்லமுறையில் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: பொதுமக்கள் யாரெனும் கருத்து தெரிவிக்க வேண்டுமா என்று கேட்டார். மேலும் கருத்து தெரிவிக்கும் முன்னர் தங்களது பெயர் மற்றும் ஊரினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.}

**9. திரு.பழனிபாரதி, அரியலூர்:**

அனைவருக்கும் வணக்கம், தற்போது மேம்பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தவதால் எந்தவித பிரச்சனைகளும் வராது என்றார். தற்போது வெடிபொருட்கள் பயன்படுத்தப்படவில்லை என்றும், பிரேக்கர் வைத்து உடைக்கப்படுவதாகக் கூறினார். சுரங்கங்களில் இரவு பகல் எல்லா நேரங்களிலும் வேலை நடைபெறுவதில்லை என்றும் ஊரைச்சுற்றி நிறைய சுரங்கங்கள் இருப்பதாகவும் கூறினார். சுரங்கம் காலை 8

மணியிலிருந்து மாலை 5 மணிவரைதான் இயங்கப்போகிறது என்பதால், சுரங்கம் ஆரம்பிப்பதற்கு தங்கள் ஊரிலிருந்து எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று கூறினார்.

**10. திரு.தங்கராசு, மருவத்தூர்:**

இந்த சுரங்கம் மருவத்துரில் 1995-லிருந்து இயங்கிவருகிறது என்றும் இதனால் எந்த பாதிப்பும் இல்லை என்றார். இதனால் 50 குடும்பங்கள் பிழைத்துக்கொண்டிருந்தார்கள் என்று கூறினார். இந்த ஊரில் 3-4 சுரங்கங்கள் இயங்கிக்கொண்டிருந்ததாகவும், இடையில் நிறுத்திவிட்டதாகவும் கூறினார். விவசாய நிலங்களை மக்கள் விற்றுவிட்டார்கள் என்றும், சுரங்கங்கத்தினில் வேலை வாய்ப்பு கொடுத்தால் மக்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் கூறினார். வாகன ஓட்டுனர், கூலிவேலை உள்ளிட்ட பணிகளுக்கு வெளியூர் ஆட்களை பணியிலமர்த்தாமல், உள்ளூர் மக்களுக்கு வேலைகொடுத்தால் நல்லது என்று கூறினார். வெளியூர் ஆட்களை வைத்து இயக்கினால், இந்த சுரங்கத்தால் எந்த பயனுமில்லை என்று கூறி, உள்ளூர் மக்களுக்கு வேலைகொடுத்து சுரங்கத்தை ஆரம்பிக்கவேண்டும் என்றார்.

**11. திரு. சதிஷ், சூழலியல் காப்பாற்று செயலாளர்:**

அனைவருக்கும் வணக்கம், உங்கள் ஆச்சார விவரங்களை, கலாச்சார சம்பிரதாயங்களை காப்பாற்றிக்கொண்டு, உங்கள் மனோபாவங்களை மதிக்கிறேன் என்றும், உங்கள் அபிப்ராயங்களுடன் நியாயமான பிரச்சனைகளை ஒப்புக்கொண்டு உங்களுடன் ஒருமனதாக ஒப்புக்கொள்கிறேன் என்றும் கூறினார். அரசாங்கம் இந்த ஊரினை தத்தெடுத்துக்கொண்டு, நிலையான வளர்ச்சி உருவாக்குவதற்கான அதிகமான நிதியை உடனே வெளியிடவேண்டும் என்றும், உத்யோகம் வேலைவாய்ப்பினை உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், தகுதி உள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகளை கொடுக்கவேண்டும் என்றும், அரசாங்க உயர்நிலை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். இந்த ஊர் சூழலியல் மற்றும் பசுமையுடன் நிலையாக இருக்கவேண்டுமென்று, சூழலியல் காப்பாற்று செயலாளராக கேட்டுக்கொள்வதாகவும், இந்த உரிமையாளர் மரங்கள் வளர்க்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் கூறி மரங்கள் வளருங்கள் அவற்றை காப்பாற்றுங்கள் என்றார். இந்த உரிமையாளர் அவர்களுக்கு, எவ்வித கட்டுப்பாட்டையும் விதிக்காமல் சூழலியல் அனுமதியை உடனடியாக கொடுக்கவேண்டுமென்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளை மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதாகக் கூறினார்.

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: பொதுமக்கள் யாரெனும் கருத்து தெரிவிக்க வேண்டுமா என்று கேட்டார். மக்கள் ஒவ்வொருவராக தங்கள் கருத்துகளை தெரிவிக்கும்படி கூறினார். ஒவ்வொருவராக பேசினால் அனைவரின் கருத்துகளும் பதிவு செய்யலாம் என்று தெரிவித்தார்.}

(**கூட்டம் தொடர்ந்தது**)

**12. திரு.சின்னதுரை, கிழக்குத் தெரு, மருவத்தூர்**:

மருவத்தூரில் சுரங்கம் வருவதை தாங்கள் தடுக்க வரவில்லை என்றும் 5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்தால் பிரச்சனையில்லை என்றும் ஊருக்கு பக்கத்திலேயே சுரங்கம் வருவதால், வீடுகள் பாதிக்கும், தூசு ஏற்படும் என்பதால் சுரங்கம் வருவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் கூறினார். இங்கு வந்திருக்கும் அனைவரும், தங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**13. திருமதி. தமிழ்ச்செல்வி, மருவத்தூர்**:

இந்த சுரங்கம் வருவதால் தங்களுக்கு எந்தவித பிரச்சனையும் ஆட்சேபணையும் இல்லை என்று கூறினார். முன்பு சுரங்கம் இருந்தபொழுதும் தங்களுக்கு எந்தவித பிரச்சனையும் இல்லை என்றும், தற்போதும் ஆடுமாடுகளுக்கு எந்த சேதமுமில்லாமல், வெடி வைக்காமல், தூசு ஏற்படாமல், வாகனங்களை பொறுமையாக இயக்கி, மக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் சுரங்கம் இயக்கினால் தாங்களும் ஒத்துழைப்பு கொடுப்போம் என்று கூறினார். தங்கள் ஊரில் வேலைவாய்ப்பின்றி நிறைய மக்கள் உள்ளதாகக் கூறி அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சம்பளம்

அதிகரித்து கொடுக்கவேண்டும் என்றார். நிறுவனம் ஒத்துழைப்பு கொடுத்தால், தாங்களும் ஒத்துழைப்பு கொடுப்போம் என்றார்.

**(சிறு சலசலப்பு ஏற்பட்டது, பிறகு கூட்டம் தொடர்ந்தது).**

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: பொது மக்களிடம் அமைதிகாக்குமாறும், அனைவரையும் அமருமாறும் கேட்டுக்கொண்டார்.}

**(கூட்டம் தொடர்ந்தது)**

**திரு.கணேசன், பனங்கூர், அரியலூர்**: பொது மக்களிடம் அமைதியாக இருக்க வேண்டும் என்றும், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், சுற்றுச்சூழல் அதிகாரி, சுற்றுச்சூழல் ஆலோசகர் மற்றும் காவல் துறை அவர்களுக்கு மரியாதை கொடுக்குமாறு கூறினார். மேலும் அவர்கள் எல்லோரும் இத்திட்டத்திற்கான கருத்துகளை முறையாக விவரித்து கூறுவதற்காக வந்துள்ளனர் என்றும் மேலும் யாரும் சத்தம் போட வேண்டாம் என்றும் அனைத்து விபரங்களும் அதிகாரிகள் கூறுவார்கள் என்றும் கூறினார். அனைத்து பொது மக்களையும் அமருமாறும் கேட்டுக்கொண்டார். தானும் கிராமத்தில் இருந்துதான் வந்துள்ளேன் என்றும் இது அருமையான நிகழ்வு என்றும் பொதுமக்கள் தங்களை கருத்துகளைக் கூறலாம் என்றும் வெளியே யாரும் செல்ல வேண்டாம் என்று கூறினார்.

**14. திரு.கிருஷ்ணசாமி, பனங்கூர்:**

சுரங்கம் தொடங்குவதால் தங்களுக்கு எந்த பிரச்சனையும் கிடையாது என்றார். சாலைகளில் பள்ளங்கள் உண்டாகக்கூடாது என்றும் அதை நிறுவனம்தான் சரிசெய்து கொள்ளவேண்டும் என்றும் கூறினார். மக்களுக்கு பாதிப்பில்லாமல் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

**15. திரு.R.சரவணன், மருவத்தூர்:**

பொதுமக்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மற்றும் அதிகாரிகளிடம் கருத்துகளை கூறலாம் என்று கூறினார். வெடி வைக்கவேண்டாம் என்ற கோரிக்கைக்கு வெடி வைக்கவில்லை என்று கூறிவிட்டார்கள். ஊரில் மாசு பிரச்சனை வரக்கூடாது என்று கேட்டுக்கொண்டதாகவும், மாசு உண்டாகாமல் செய்து கொடுப்பதாகக் கூறியுள்ளார்கள் என்றார். சாலைகளுக்கு எந்த பிரச்சனையும் வரக்கூடாது என்று கோரிக்கைக்கு, தாங்கள் சாலைகளில் பள்ளம் ஏற்படும்படி அதிக டன்கள் ஏற்றிக்கொண்டு செல்லவில்லை என்றும், அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டால் தங்களிடம் தெரிவிக்கும்படி கூறியுள்ளார்கள் என்றார். முன்பிருந்ததைவிட இப்போது தொழில்நுட்பம் முன்னேறி உள்ளது என்றார். இரண்டு நாட்களுக்கு முன்பு, ஊரில் வந்து இக்கூட்டம் பற்றி விளம்பரப்படுத்தி நம்மை அழைத்திருக்கிறார்கள். இப்போது இரண்டு நபர் கெடுக்க வந்துள்ளதாகக் கூறினார். நமது ஊருக்கு வரவிருக்கும் நல்லதை, கெடுத்துக்கொள்ளக்கூடாது என்றார். நமது ஊருக்கு அவர்கள் மூலம் நல்லது நடக்கட்டும் என்றும், மற்றவர்கள் தங்கள் மனதிலுள்ள கருத்தை தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் இத்திட்டத்தை குறித்த கருத்துகளை பதிவு செய்யலாம் என்றும் மனு கொடுப்பவர் கொடுக்கலாம் என்றும் தெரிவித்தார்.}

**(கூட்டம் தொடர்ந்தது)**

**16. திரு. ரெங்கசாமி, மருவத்தூர்:**

1991-ல் இடம் வாங்கி, 1995-ல் சுரங்கம் ஆரம்பித்தார்கள். சிறிய பிரச்சனையால் 2000-ல் தற்காலிகமாக நிறுத்திவைத்திருந்தார்கள். ஊருக்கு எதுவும் பாதிப்பு ஏற்பட்டதை போல் தனக்குத் தெரியவில்லை என்றார். பள்ளி குழந்தைகள் சென்று வருவதாகவும், பள்ளி வாகனங்கள் அதிகமாக வருவதால், இரவு 10 மணிக்குமேல் யாருமில்லாத நேரத்தில்

இயங்கினால் சிறப்பாக இருக்கும் என்றார். இதை தடை செய்யுமளவிற்கு பிரச்சனை எதுவும் இல்லை என்றும், மாசு கட்டுப்பாட்டு துறை கவனமாக செயல்பட்டால் நல்லது என்றார்.

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: பொதுமக்கள் யாரெனும் கருத்து தெரிவிக்க வேண்டுமா என்று கேட்டார்.}

**17. திரு. ஆறுமுகம், சுப்பிரமணி, ராஜு, மருவத்தூர்:**

கிராம முக்கியபிரமுகர்கள் இல்லாமல் எந்தவொரு நிர்வாகமோ, குவாரியோ, சுரங்கமோ, தார்பிளாண்ட், கிரஷரோ அனுமதி பெறக்கூடாது என்றார்கள். 2024-ல் தார் ஆலை அமைப்பதற்கு எதிராக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்ததற்கு, மாவட்ட சுற்றுச்சூழல் அதிகாரி அனுமதி கொடுக்கவில்லை என்று கூறி, அதுபோல இதற்கும் தங்கள் கிராமத்தின் சார்பில் எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறினார். ஊர் மக்களுக்கு ஒன்றும் தெரியாமல் அழைத்துவந்து, கையெழுத்து வாங்கிக்கொண்டு அனுமதி கொடுத்தால், தாங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுப்போம் என்றார்கள். ஏனென்றால், 2024-ல் மருவத்தூரில் தார் ஆலை அமைப்பதற்கு கேட்டபோது அனுமதி கொடுக்கவில்லை, அதனால் இதற்கும் அனுமதி வழங்கக் கூடாது என்றார்கள். ஏற்கனவே, இரவு பகலாக 50 யூனிட் டிப்பர்கள் இயங்கி வந்தன என்றும் கண்ட நேரங்களில் வெடிவைப்பார்கள் என்றும் எத்தனையோ வீடுகள் சேதமாகியுள்ளன என்றும் சாலைகள் முழுதும் சேதமாகியுள்ளன என்றும் எத்தனையோ ஆடுகள் மற்றும் நாய்கள் இறந்துள்ளன என்றும் தெரிவித்தார்கள். மேலும் இந்த குவாரிக்குள் மனிதன் விழுந்து இறந்ததாகக் கூறினார்கள். அதனால், அனுமதி வழங்கக் கூடாது என்றும், மீறி வழங்கினால் சாலை மறியல் போராட்டம் நடத்துவோம் என்றும் கூறினார்கள்.

**இடையே ஒருவர்**: இங்கு வந்திருக்கும் யாருக்கும் தகவல் தெரியாது என்றும் மக்கள் எதற்காக வந்துள்ளோம் என்று தெரியாமல், கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ளதாகக் கூறினார்.

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: பேசுவது எல்லாவற்றையும் இங்கு பதிவு செய்கிறார்கள் என்றும் கருத்து ஒவ்வொன்றையும் பதிவு செய்து அப்படியே சென்னைக்கு அனுப்பிவிடுவோம் என்றும் கூறினார்.}

**(கூட்டம் தொடர்ந்தது)**

ஆனால் அவர் கூட்டத்தை முடித்துவிடுங்கள், இல்லையென்றால் திங்கட்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுப்போம் என்றும் மருவத்தூருக்கு சுரங்கம் தேவையில்லை என்றும் கூறினார்.

**18. திரு. கதிரவன், முன்னாள் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர், மருவத்தூர்:**

பொதுவாக மருவத்தூர்-பேரளி-பனங்கூர் எல்லையில் கிரஷரே வேண்டாம் என்றும் தங்களது ஊராட்சிக்கு உட்பட்ட இடங்களில் கிரஷரோ, சுரங்கமோ வேண்டாம் என்று பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டிருப்பதாகவும் கூறினார். ஒருமுறையல்ல, இரண்டு கிராம சபைகளில் தீர்மானம் செய்திருக்கிறோம் என்றார். அதனால் இந்த சுரங்கம் மறுபடியும் தொடங்குவது, தங்களுக்குத் தேவையில்லை என்றார். இந்த சுரங்கத்தையொட்டி 150 குடும்பங்கள் அந்த இடத்தில் இருக்கிறார்கள். தற்போது ஒரு 40 குடும்பங்களின் வீடுகள் உள்ளன. அந்த இடத்தில் சுரங்கம் தொடங்கினால், அங்கு மக்கள் யாரும் குடியிருக்கமுடியாது என்றார். ஏற்கனவே, எறையூர் பகுதியில் அதிக கிரஷர்கள் உள்ளதால், மக்கள் பிரச்சனை செய்துகொண்டிருக்கிறார்கள். தாங்களும் அந்த நிலைக்கு ஆளாகிவிடுவோம் என்றார். வாகனங்களில் அதிக எடை ஏற்றிக்கொண்டு செல்வார்கள் என்றும் அதனால் சாலைகள் மோசமாகும் என்றும் கூறினார். ஏற்கனவே தங்கள் ஊருக்கு அருகில் தார் ஆலை அமைப்பதற்கு அனுமதி கேட்டபோது, அதிகாரிகள் மறுத்துவிட்டதாகக் கூறினார். அந்த இடத்தில் தார் ஆலை வேண்டாம் என்று கூறி தடுத்துவிட்டதால், இந்த கிரஷர் இந்த இடத்தில் வேண்டாம் என்றார். இந்த சுரங்கம் தோண்டியதால், பெரிய பள்ளம் உள்ளதாகவும் அந்த பள்ளத்தில் பலர் தவறி விழுந்து இறந்திருக்கிறார்கள் என்றும் கூறினார். அந்த இடத்தில் கிட்டத்தட்ட 50-60 அடிக்கு மேல் பள்ளம் இன்னும் தூர்ந்து போகாமல்

உள்ளது என்றார். மீண்டும் பள்ளம் தோண்டினால் மக்களுக்குதான் ஆபத்து என்றார். சுரங்கத்தை ஒட்டி 30 மீட்டர் தொலைவிலேயே வீடு இருக்கிறது என்றும் அனுமதி கொடுக்காதீர்கள் என்றும் கூறினார். அனுமதி கொடுத்தால், எதிர்ப்பு தெரிவிப்போம் என்றார்.

**19. திரு.வெங்கடேசன், மருவத்தூர்:**

தங்களது கிராமத்தில், ஏற்கனவே 20 வருடங்களுக்கு முன்பிருந்தே ஒரு கிரஷர் இயங்கிக்கொண்டிருப்பதாகக் கூறினார். அதனால் மாசு பிரச்சனை உண்டாகிறது என்றும் அதை தடுப்பதற்கு தாங்கள் முயற்சித்துக்கொண்டிருப்பதாகக் கூறினார். சுரங்கத்தால் ஏற்கனவே ஊரைச்சுற்றி பெரிய பாதிப்பு இருப்பதாகக் கூறினார். ஊருக்கு கிழக்கு, மேற்கு, வடக்கு என்று அனைத்து பக்கத்திலும் சுரங்கம் உள்ளதால் ஊரைச்சுற்றி முழுவதும் பள்ளமாக உள்ளதாகக் கூறினார். எப்போது என்ன பாதிப்பு வரும் என்று தெரியாத நிலையில்தான் தாங்கள் வசித்து வருவதாகக் கூறினார். இந்த சுரங்கத்திற்கும் தங்கள் ஊருக்கும் வெறும் 500 மீ தொலைவுதான் உள்ளதாகக் கூறினார். அதில் அவர்கள் வெடிபொருட்கள் பயன்படுத்தினால் பாதிப்பு இன்னும் அதிகமாகத்தான் இருக்கும் என்றார். ஏற்கனவே பேரளியிலிருந்து மருவத்தூர் வரும் வழியில் ஒரு தார் ஆலை அமைந்துள்ளதாகவும், அதையே நிரந்தரமாக மூடவேண்டும் அல்லது சாலையிலிருந்து 500 மீட்டர் தள்ளி அமைக்கச் சொல்லி மனு கொடுக்க வேண்டும் என்று தாங்கள் முடிவுசெய்திருப்பதாகவும் கூறினார். சாலைக்கும் அந்த தார் ஆலைக்கும் வெறும் 50 அடி தொலைவுதான் உள்ளது என்றும் அதிலிருந்தே மாசு பிரச்னை அதிகம் இருப்பதாகவும் அதையே கட்டுப்படுத்தாமல் இருக்கிறார்கள் என்றும் கூறினார். இந்த சுரங்கத்திற்கு மாசு சான்றிதழ் எதுவும் கொடுக்காமல் மக்களுக்கு நல்லது செய்வதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். முடிந்தவரை குவாரிக்கு அனுமதி கொடுக்காதீர்கள் என்று கூறினார்.

**20. திரு.குணசேகரன், மருவத்தூர்:**

மாவட்ட ஆட்சியருக்கு வணக்கம் தெரிவித்தார். ஊர் சாலையில் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் செல்லுவதாகவும், அந்த மண் சரியில்லாத மண் என்றும் கூறினார். அருகில் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கொடுத்திருக்கிறார்கள் என்றும் இப்போது மீண்டும் குவாரி செயல்படபோவதாக கிராமத்து பொதுமக்கள் அழைத்துக் கூறினார்கள் என்றார். மக்களுக்காகத்தான் இந்த ஆட்சி என்றும் நியாயமான முடிவைச் செய்யுங்கள் என்றும் கேட்டுக்கொண்டார். வேறு எதுவும் செய்வதற்கு அனுமதி கொடுக்காதீர்கள் என்றும் அதற்கு தாங்கள் கட்டுப்படுவதாகக் கூறினார்.

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: பொதுமக்கள் யாரெனும் கருத்து தெரிவிக்க வேண்டுமா என்று கேட்டார். இத்திட்டத்தினை குறித்து கருத்து தெரிவிக்கவேண்டுமெனில் கருத்துகளை பதிவு செய்யும்படி கூறினார்.}

இதனையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துகள் கூற முன்வராததால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர் அவர்கள் இக்கூட்டத்தில் தெரிவித்த அனைத்து கருத்துக்களும் ஒளி மற்றும் ஒலி வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவை அனைத்தும் மற்றும் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக அனுப்பி வைக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு, பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவு பெற்றதாகத் தெரிவித்தார்.

{**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**: கருத்து தெரிவித்த அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் சார்பாக நன்றி தெரிவித்தார்.}

இணைப்பு **:**

1. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல் (25 பக்கங்கள்: 279 நபர்கள்)
2. திட்ட உரை விளக்கக்காட்சி

3. பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் - 25 எண்கள்

4. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு குறும்பதிவி.

| | |
|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் |
| தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், | (பொது) |
| பெரம்பலூர் | பெரம்பலூர் மாவட்டம். |